விலை சதம் 10

# சுதந்திரன்

SUTANTIRAN

வ. ஆ. 2001, சித்திரை 5 உ சனி (18-4-70) ஸபர் பிறை 11— புத்தகம் 24 இதழ் 15

## தமிழரசு ஊர்வலத்துக்கு தடை! பொலீசார் சர்வாதிகாரம்!

### திருமலையெங்கும் பரபரப்பு

திருமலை, ஏப். 16—
திருகோணமலையில் பொலீசாரின் சர்வாதிகாரம் எல்லைமீறி வருகிறது தமிழரசுக் கட்சியின் பிரச்சார வேகத்தை மட்டுப்படுத்தி வரும் சூழ்ச்சித் திட்டத்துடன் திருமலை போலீசார் கெடுபிடி வேலைகளில் இறங்கியிருப்பதாக திருமலை பொது மக்கள் கருதுகிறார்கள்.

திருமலையில் ஆளும்கட்சிக்கு ஆதரவு தேய்ந்து வருவதையும் தமிழரசு வேட்பாளர் திரு: நேமிநாதனுக்கு ஆதரவு பல்கிப்பெருகுவதையும் உணர்ந்த பொலீசார் இப்போது தமிழரசார் மீது வஞ்சம் தீர்க்கும் பலத்தை நடத்தி வருகின்றனரா என்று பொது மக்கள் கேட்கிறார்கள்.

அண்மையில் தமிழரசு வாலிப முன்னணி அலுவலகங்களில் பறந்து கொண்டிருந்த தமிழரசுக் கொடிகள் பொலீசாரால் அத்துமீறி அறுக்கப்பட்டதும், தமிழரசு வாலிபர்கள் சி. ஐ. டி. விசாரணைக் குட்படுத்தப் பட்டதும் தெரிந்ததே.

கடைசியாக கிடைத்த செய்தியின்படி இம்மாதம் 21ந் திகதி திருமலையில் தமிழரசுக் கட்சி நடத்த இருந்த ஊர்வலத்துக்கு பொலீசார் தடைவிதித்துள்ளனராம்: சட்டப்படி நியமன நாளாகிய 23ந் திகதிக்கு பின்புதான் ஊர்வலம் நடத்துவதற்கு தடை விதிக்க முடியும். ஆனால் திருமலைப் பொலீசார் சர்வாதிகாரத் தனத்துடன் 21ந் திகதியே தமிழரசு ஊர்வலத்துக்கு தடை விதித்துள்ள செயல் திருமலையெங்கும் பலத்த பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது:

யாழ்ப்பாணத்தில்

# மார்ட்டினுக்கு திரளும் பேராதரவு! வீட்டின் வெற்றி உறுதியாகிறது!!

### வாக்குகேட்க வந்த த. கா: தலைவரை வராதேயென்று விரட்டினர் குருநகர் மக்கள்!

யாழ்ப்பாணம், ஏப். 18—
மே 27ந் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் திரு. சி. எக்ஸ். மார்ட்டின் அவர்கள் வெற்றிபெறுவது உறுதியென்பதை, திரு. மார்ட்டினுக்குத் திரளும் மக்கள் பேராதரவும், திரு. பொன்னம்பலத்துக்கு மக்கள் கொடுக்கும் 'மரியாதையும்' துலாம்பரமாக எடுத்துக் காட்டுவதாக தொகுதி அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

திரு. மார்ட்டின் அவர்கள் ஆதரவு கோரி சென்ற இடமெல்லாம் மக்கள் அகமும் முகமும் மலர அவரை வரவேற்று தங்கள் ஆதரவு திரு. மார்ட்டினுக்கே என்பதையும் தமிழரசுக் கட்சியின் வெற்றியையும் உறுதிப் படுத்தி வருகிறார்கள்.

இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர் யாவரும் ஒருசேர திரு. மார்ட்டின் அவர்களையே இம்முறை ஆதரித்து நிற்கிறார்கள். இந்துப் பல்கலைக் கழகம் என்ற கூச்சலைக் கிளப்பி தமிழ் மக்களை மதரீதியில் பிளவுபடுத்த முயலும் திரு: பொன்னம்பலத்தை அரசியல் பாலைவனத்துக்கு அனுப்பியே தீருவது என்று அவர்கள் முடிவு எடுத்து விட்டார்கள்.



கரையூர், பாசையூர், குருநகர் பகுதிகள் திரு. மார்ட்டின் அவர்களின் கோட்டையாக இம்முறை விளங்குகின்றன. முஸ்லிம் மக்களில் கணிசமான பகுதியினர் இம்முறை மார்ட்டினுக்கே தங்

(4ம் பக்கம் பார்க்க)

## கருப்ப நீர் இறக்கவும் அரசாங்க உத்தரவா?

உடுப்பிட்டி, ஏப். 16
"பனை மரத்திலிருந்து கருப்பநீர் உண்டாக்குவதற்கு உத்தரவுப்பத்திரம் பெற வேண்டுமென்ற நீதியீனமான சட்டத்தை அரசாங்கம் உடனடியாக நீக்க வேண்டும். நீக்காவிட்டால் நேரடி நடவடிக்கையில் இறங்க நேரிடும். தமிழரசுக் கட்சியின் முழுப்பலத்தோடும் இச்சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். இக்கொடூரமான சட்டத்தை நீக்காவிட்டால் சட்ட மறுப்புச் செய்யப் போராட்டத்துக்கு ஆயத்தமாயிருங்கள்"

(4ம் பக்கம் பார்க்க)

## மாபெரும் ஊர்வலம்

உடுப்பிட்டித் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. க. ஜெயக்கொடி அவர்களை ஆதரித்துப் பிரமாண்டமான ஊர்வலம் 18-4-70 சனிக்கிழமை காலை 7 மணிக்கு வல்லிபுரக் கோயிலடியில் இருந்து ஆரம்பமாகும். இந்த ஊர்வலத்தில் கார்கள் உழவு யந்திரங்கள் மாட்டுவண்டிகள், சயிக்கிள்கள் ஆகியன இடம் பெறுகின்றன.

ஊர்வலம் உடுப்பிட்டித் தொகுதியின் பிரதான வீதிகளுடாகச் சென்று மந்திகை அம்மன் ஆலயத்திற் கருகாமையில் உள்ள கூட்ட மைதானத்தைச் சென்ற

(4-ம் பக்கம் பார்க்க)

## பெருந்துறையில் தி. மு. க. பெருவெற்றி

சென்னை, ஏப். 17
தமிழ் நாடு சட்ட சபையின் பெருந்துறைத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் பெரு வெற்றியீட்டியுள்ளது. தி. மு. க. சார்பில் போட்டியிட்ட திரு. எஸ். ஆர். சென்னியப்பன் 12,725 அதிகப்படி வாக்குகளால் தம்முடன் போட்டியிட்ட சம்யுக்த சோசலிஸ்ட் கட்சி வேட்பாளரைத் தோற்கடித்தார்.

## ஒருவருக்கே சொர்க்கம்

(விளக்கம் 4ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ப் பெயர்களுக்கு தார்ப்பூச்சு ஆரம்பம்!

கினிகத்தனை, ஏப். 17
தேர்தல் காலத்தில் நாட்டில் வகுப்பு வெறியையும் இனக்கலவரத்தையும ஏற்படுத்தத் தீய சக்திகள் முனைத்திருப்பதைக் காணக் கூடியதாயிருக்கின்றது.

இரவோடிரவாக தமிழ் அழிப்பும்— தமிழருக்கெதிரான நோட்டீசுகளும் மலையகம் எங்கும் காணப்படுகின்றன. தேர்தலில் மலையகத் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்று அவர்கள் தலைவர்கள் சொல்லு முன்பே இனவிரோத நடவடிக்கைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.


அட்டன்பிறின்சஸ்தியேட்டருக்கு முன்னுள்ள அட்டன் நகர எல்லையைக் குறிக்கும் பலகையிலுள்ள தமிழ் எழுத்துத் தார்பூசி அளிக்கப்பட்டுள்ளது. சிங்களத்தையும் ஆங்கிலத்தையும்விட்டு தமிழ் மொழிக்குத் தார் பூசிய செயல் சில விஷமிகளின் செயலாகத்தானிருக்கவேண்டும். கம்பளை—மாத்தளை என்ற நகர எல்லையைக் குறிக்கும் தமிழ் எழுத்துக்களுக்கும் தார் பூசப்பட்டுள்ளது.

மேலும் அனுராதபுரியிலிருந்து மலைநாடுவரையுள்ள இடம் குறிக்கும் சுவர் எழுத்துக்கள் அத்தனையும் மை பூசி அழிக்கப்பட்டுள்ளது. அனுராதபுரியில் பல இடங்களில் தமிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

## அவரே ஒப்புக்கொள்கிறார்!

"தமிழரசுக்கட்சி எப்பொழுதும் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி வந்திருக்கிறது!
—கே. டபிள்யூ. தேவநாயகம்'
('சன்' 17-4-70)




## கூட்டுக்கட்சிகளின் விஷப்பல் தெரிகிறது!

"சமஷ்டிக் கட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக தமிழ்மொழி விசேட விதிகள் மசோதாவை பாராளுமன்றத்தில் பிரதமர் டட்லி சேனநாயகா கொண்டு வந்ததுதான் சிங்கள மொழியின் அழிவின் தொடக்கமாகும்."

—ஸ்டான்லி திலகரத்ன.
(கூட்டுக்கட்சிகளின் பிரசாரக் கூட்டத்தில் —டெயிலி நியூஸ் 17-4-60)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## அடிமைத்தனமா? விடுதலைப் பாதையா?

ஓர் இனத்தின் உடலும் உயிரும் போன்றவை அதன் மொழியும் நாடும்!

உயிரின்றி உடலோ, உடலின்றி உயிரோ எப்படித் தனித்து இயங்க முடியாதோ அதே போல, மொழியை, அல்லது நாட்டைப் பறிகொடுத்த ஓர் இனம் தன்னை ஒரு தனித்துவம் வாய்ந்த இனம் என்று ஒருபோதும் அழைத்துக்கொள்ள முடியாது.

மொழியை அல்லது நாட்டை—அல்லது இரண்டையுமே பறிகொடுத்துவிட்ட இனத்தை அழிவிலிருந்து காப்பாற்ற ஆண்டவனாலும் முடியாது.

ஈழத்தமிழினத்திடமிருந்து அதன் மொழியையும், அதன் பாரம்பரிய தாயகத்தையும் அபகரித்து, இந்நாட்டிலிருந்து தமிழினத்தைவேரோடு ஒழிப்பதுதான் 1947ம் ஆண்டு முதல் சிங்கள ஏகாதிபத்தியத்தின் நோக்கமாக—திட்டமிட்ட சதியாக இருந்து வருகிறது.

தமிழ் பேசும் மக்களின் தலைவர்களுக்கு பதவியென்ற மயக்க மருந்தையூட்டி அவர்களை ஆழ்ந்த உறக்கத்திலாழ்த்திவிட்டு, தமிழ் பேசும் மக்களுக்கு நோவு தெரியாமலேயே இந்த இன ஒழிப்பு 'ஆபரேஷனை' நடத்துவதில் 1947 முதல் 1956 வரை யூ.என்.பி. ஆட்சி ஈடுபட்டிருந்தது:

அன்று தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கிய தமிழ் காங்கிரஸ் தலைவர்கள், யூ. என். பி.க்கு மீளா அடிமையாகி பதவியெனும் எலும்புத் துண்டைக் கடித்துக் கிடந்த நேரத்தில்தான் 10 இலட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கும் அநியாய பிரஜாவுரிமைச் சட்டங்களை யூ. என். பி. ஆட்சி நிறைவேற்றியது.

அதே கால கட்டத்தில்தான் தனித் தமிழ் பிரதேசமாக அன்று விளங்கிய—தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பூமியாம் கிழக்கிலங்கையில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் துரித கதியில் நடைபெற்றது.

கல்லோயாவும், அல்லையும் மூதூரும், கந்தளாயும், பதவியாவும், திருமலையும் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது 1947—1956க்கு இடைப்பட்ட காலத்தில்தான். இதன் பலாபலன்தான் கிழக்கிலே தோன்றிய புதிய சிங்களத்தொகுதியான அம்பாறை. மூதூரும் திருமலையும் எப்பொழுது பறிபோகுமோ என்று அஞ்சும் நிலை இன்று ஏற்பட்டிருப்பதற்கும் காரணம் இந்தச் சிங்களக் குடியேற்றமே!

கல்லோயாவில் தாம் ஆக 60 சிங்களக் குடும்பங்களையே குடியேற்றுவதற்கு ஒப்புக் கொண்டதாகவும் இது பெரிய துரோகமா என்றும் திரு. பொன்னம்பலம் அண்மைக்காலமாக ஒரு கேள்வியைக் கேட்டுவருகிறார்!

ஆனால், 18-10-55 பாராளுமன்ற நடவடிக்கை குறிப்பேட்டின்படி காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம் சிங்களக் குடியேற்றம் பற்றி கேட்ட ஒரு கேள்விக்கு தமிழ் பிரதேசங்களில் 1949 முதல் 1954 முடிய ஒரு இலட்சத்து எண்பதினாயிரத்து பதினேழு சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டிருப்பதாக அன்றைய காணி அமைச்சர் திரு. புலங்குலமைதிசாவை பதிலளித்திருக்கிறார்—இந்த உண்மையை திரு. பொன்னம்பலம் தனது பொய்ப் பிரச்சாரத்தால் மூடிமறைத்து விட முடியாது.

1956ம் ஆண்டு தமிழரசுக் கட்சியிடம் தமிழினம் தனது பொறுப்பை ஒப்படைத்த பின்னர்தான் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை தமிழ் மக்கள் அனுபவரீதியாக உணர்ந்திருக்கிறார்கள்!

இன்று கிழக்கு மாகாணத்தை—தமிழ்ப் பேசும் மக்களின் பண்டைய தாயகத்தை-கோணேசப் பெருமான் அமைந்துள்ள திருமலையை சிங்களவர்களிடம் தாரை வார்ப்பதற்கு தமிழ் காங்கிரஸ் முடிவுசெய்து விட்டது.

திருகோணமலை சிங்கள மயமாகிவருகிறது. ஆகவே அங்கு தமிழ் பேசும் மக்களுக்கான பல்கலைக் கழகம் நிறுவப்படக் கூடாது என்று இவ்வாரம் மீண்டும் உயர்கல்விச் சபையிடம் கூறியிருக்கிறார் திரு. பொன்னம்பலம்!

யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவித் தருகிறோம் என்று யூ.என்.பி. அரசாங்கத்தின் காலைப் பிடித்து ஒரு வாக்குறுதியைப்பெற்று அதைக் காட்டி பாராளுமன்றக் கதிரையைக் கைப்பற்றிவிடலாமென்ற முற்று முழுதான சுயநல நோக்குடன்—கோணேசடி கொலுவிருக்கும் திருகோணமலையை—கிழக்கு மாகாணத்தை—சிங்களவர்களுக்கு—யூ. என். பி.க்கு தாரை வார்க்க முடிவு செய்துவிட்டார் தமிழ்க் காங்கிரஸ் தலைவர்!

இவரும் ஒரு தமிழ் தலைவரா? அகில இலங்கைத் தமிழர்களுக்காக பேச இவருக்கு என்ன யோக்கியதை இனியும் இருக்கப்போகிறது? தமது கட்சிக்கு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் என்று பெயர் வைத்துக் கொள்ள இவருக்கு என்ன அருகதை இருக்கிறது?

திருமலை சிங்கள மயமாகிறது; அங்கே தமிழ் பல்கலைக்கழகம் வேண்டாம் என்று இன்று கூறுபவர்—அவரே யாதரிக்கும் இன்றைய ஒற்றையாட்சி அமைப்பு தொடருமானால் 15, 20 வருடங்களில் யாழ்ப்பாணமும் சிங்கள மயமாகிவிடுமே—அப்போது என்ன சொல்வார்? தமிழர்களே! கடலில் விழுந்து சாவுங்கள்; இன்றேல் தேசிய ஒற்றுமை கருதி சிங்களவர்களோடு இரண்டறக் கலவுங்கள் என்று சொல்லுவாரா?

தமிழ்பேசும் மக்களே! நன்கு சிந்தித்துப் பாருங்கள்!

கிழக்கு மாகாணத்தை—அங்கு வாழும் தமிழ் பேசும் மக்களை—இன்று சிங்களவர்களுக்கு தாரை வார்க்கத் துணிந்த தமிழ்க்காங்கிரஸ் நாளை அதேபோல் வடக்கு மாகாணத்தையும் சிங்களவருக்கு அடவு வைக்க ஏன் முன்வரமாட்டாது?

திருமலையைச் சிங்கள மயத்திலிருந்து பாதுகாப்போம்; அங்கு தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவி தமிழை வளர்ப்போம்; இன ஒற்றுமையை வளர்ப்போம்; தமிழ் பேசும் மக்களின் தாயகமாம் வடக்கு கிழக்கு மாகாணங்களை என்ன விலைகொடுத்தும் பாதுகாத்து ஆங்கே தனியொரு ஆட்சியமைப்பு காண்போம். ஒற்றையாட்சியை ஒழித்துக்கட்டி சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு சமாதி, கட்டுவோம்; உரிமைபெற்ற இனமாக வாழ்வோம் என்று அறைகூவி அழைக்கிறது தமிழரசுக் கட்சி!

ஒற்றையாட்சி அடிமைத்தனத்தை ஏற்போம்; எழில் கொஞ்சும் திருமலையை—நெற்களஞ்சியமாம் கிழக்கிலங்கையை—சிங்களவர்களுக்கு எழுதிக் கொடுத்துவிடுவோம்; வடக்கில் மட்டும் சுருண்டு பதுங்கி சலுகைகளுக்கு சிங்களவர்களிடம் கையேந்தி வாழ்வோம் என்று கூறுகிறது "அகில இலங்கை" தமிழ் காங்கிரஸ்!

தமிழினமே! நீ விரும்புவது தமிழரசு காட்டும் விடுதலைப் பாதையா? தமிழ் காங்கிரஸ் காட்டும் அடிமைத்தனமா?

## பட்டபரம் துளிர்க்குமா? உக்கின கொப்பு உயிர்பெறுமா?

### இரத்தினத்துக்கு நெடுந்தீவு மக்களின் பேராதரவு!

(நெடுந்தீவு நிருபர்)

நெடுந்தீவு மக்களின் பேராதரவு திரு. கா. பொ. இரத்தினத்தை ஆதரித்து நடத்தப்பட்ட மூன்று மாபெருங் கூட்டங்களினாலும் வெளிப்படையாகத் தெரிந்தது. நெடுந்தீவு கிழக்கிலும் நடுக்குறிச்சியிலும் நெடுந்தீவு மேற்கிலும் தொடர்ந்து மூன்று நாட்கள் கூட்டங்களும் நடைபெற்றன.

திரு. இரத்தினம் நெடுந்தீவின் பல பகுதிகளுக்குஞ் சென்று மக்களைச் சந்தித்தார். திரு. இரத்தினம் நடுக்குறிச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்பொழுது 'இரண்டு தொகுதிகளை—கிளிநொச்சியையும் ஊர்காவற்றுறையையும் — தமிழரசுக் கட்சி இழந்து விடப்போகின்றதே' என்று மாற்றுக் கட்சியினர் செய்த பிரச்சாரத்துக்கு அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டமும், இன்று திரளாகக் கூடியிருக்கும் நீங்களும் சாட்டை அடி கொடுத்திருக்கின்றீர்கள். 'கொள்கையுடைய கட்சி எது சேவை செய்யத்தக்கவர் யார் என்பதை மக்கள் நன்கு அறிந்து கொண்டனர். பணத்தாலோ பொய் வதந்திகளைப் பரப்புவதாலோ மக்களை ஏமாற்ற முடியாது' என்று குறிப்பிட்டார்.

நெடுந்தீவு மேற்கில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. இரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது: 'காங்கிரசைச் சென்ற தேர்தல்களில் ஆதரித்தவர்கள் பலர் என்னை ஆதரிப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். மக்களின் நம்பிக்கைக்கும் நல்லாதரவுக்கும் தகுதியாக என் தொண்டுகளைச் செய்து அவர்களின் குறைகளைத் தீர்க்க வேண்டுமே எனும் ஏக்கமே எனக்கு உளது. வெற்றியைப் பற்றிய கவலை இல்லை. எவ்வளவு மேலதிக வாக்குக்களை நீங்கள் தருவீர்களோ அவ்வளவுக்கு சிங்கள அரசாங்கங்களோடு உறுதியாகவும் பெருமையோடும் போராடி உங்கள் குறைகளைத் தீர்க்கும் வாய்ப்புப் பெருகும்.

பட்டுப்போன மரங்களான காங்கிரசு அபேட்சகர்களுக்கு வாக்குக்களைப் போடுவதால் அவற்றைத் தளிர்க்கச் செய்ய முடியாது. தமிழரசுக் கட்சி எனும் பெருவிருட்சத்திலிருந்து உக்கிப் போய் விட்டதென முறித்து எறியப்பட்ட எட்டாவது பெரிய கொப்புத்தான் திரு. நவரத்தினம், உக்கின கொப்பையாரேனும் நட்டுத் தண்ணீர் ஊற்றுவார்களா? அறிவில்லாதவர்கள் தண்ணீர் ஊற்றினாலும் கொப்புத் தளிர்க்குமா?'

தமிழரசுக் கட்சி நெடுந்தீவுக் கிளைச் செயலாளர் திரு. மா. பெனடிற் பேசுகையில் 'தரகர்கள் இன்றி எவரும் எந்த நேரமும் போய் காணத்தக்கவர் திரு. இரத்தினம். மக்களின் குறைகளைத் தீர்த்து வைக்காமல் அவர் ஓய மாட்டார். எடுத்த காரியங்களைச் செய்து முடிக்கும் ஆற்றலும் விடா முயற்சியும் உடையவர். பல ஆண்டுகளாகக் கைவிடப்பட்டுக் கிடக்கும் இத்தீவுத் தொகுதிக்கு திரு. இரத்தினம் அவர்கள் வந்தமையால் பொற்காலம் உதயமாகி விட்டது' என்று கூறினார்:

இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணிப் பொதுச் செயலாளர் திரு. க. திருநாவுக்கரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'திரு. வி. ஏ கந்தையா அவர்கள் பெற்ற மேலதிக வாக்குக்களிலும் கூடிய வாக்குக்களை திரு. இரத்தினம் பெறுவார் என்பதை நன்கு அறிந்து கொண்ட மற்றக் கட்சியினர் இப்பொழுது ஒன்று பட்டுப் பொய்ப் பிரசாரங்களைப் பரப்புகின்றனர். தமிழரசுக்கட்சி என்ன செய்தது என்று ஈனக் குரல் எழுப்புகின்றனர்' நீங்கள் இருபது வருடமாகத் தமிழரசுக் கட்சியிலிருந்த போது என்ன செய்தீர்கள்? என்று திரு. நவரத்தினத்தைக் கேளுங்கள்!

திரு. கதிரவேலு சுய இச்சையாக வந்திருக்கிறார். இவரும் தமிழரசுக் கட்சியிலிருந்தவர்; தம்மை வேட்பாளராகத் தமிழரசுக்கட்சி நியமிக்கவில்லை என்றவுடன் சுயேச்சையாக வந்து விட்டார்: நேற்றுவரை தாம் மதித்த தமிழரசுக் கட்சியை இன்று திட்டு திட்டு என்று திட்டுகின்றார். இதுதான் இவருடைய கொள்கை உறுதி: பண்பு. இந்த சந்தர்ப்ப வாதிகளைக் கட்டுக் காசு இழக்கச் செய்ய வேண்டியது எங்கள் கடமை: போதாக்குறைக்கு சர்வோதயப் போர்வையில் 'சத்தியம்' என்று கூறிக் கொண்டு இளைஞர் சமுதாயத்துக்கு மாபெருந் துரோகஞ் செய்கின்றார் கதிரவேலுவும் அவருடைய கூலிக்கும்பலும், சர்வோதயத்துக்கும் சத்தியத்துக்கும் சாராயத்துக்கும் உறவு பேசும் இந்தக் கும்பல் புங்குடு தீவுக்கே அவமானத்தை உண்டாக்குகின்றனர்'.

## பட்டிருப்புத் தொகுதியில் பாழும் யூ.என்.பி க்கு இடமில்லை

### இதை டட்லிக்கு உணரவைத்தார் கல்லாற்றில் ஒரு வீரத் தமிழ் பெண்

பட்டிருப்பு, ஏப். 16

தமிழரசுக் கட்சித்தலைவரான இராசமாணிக்கம் அவர்களின் பட்டிருப்புத் தொகுதியில் ..... கல்லாறு என்னுமிடத்தில்— யூ. என். பி. வால்கள் சிலர் ஒழுங்கு செய்த தேர்தல் கூட்டம் ஒன்றிற்கு, பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்களும் சமூகமளித்திருந்தார், தலைவர் இராசமாணிக்கம் அவர்களை எதிர்த்துப்போட்டியிடும் யூ. என். பி. வேட்பாளரான தம்பிராசா என்பவரும் அந்த மேடையில் இருந்தார், மேடையைச் சுற்றிவர இருந்த வீடுகள் ஒவ்வொன்றிலும் தமிழரசு கட்சிக் கொடிகள் கம்பீரமாக பறந்து கொண்டிருந்த காட்சியைக் கண்டு பிரதமர் மனமுடைந்து வீற்றிருந்த அந்த மேடையில் நிகழ்ந்த ருசிகரமான ஒரு சம்பவம் தமிழினத்தின் விரோதிகளுக்கும் துரோகிகளுக்கும் பலத்தசாட்டையடி கொடுப்பதாக அமைந்தது.

தன்னுடைய சேலையால் ஒரு மாலையை மறைத்துக் கொண்டுவீரத்தாய் ஒருத்தி மேடைக்கு பிரதமர் அவர்களை நோக்கி நடந்து வந்தாள், யாரும் எதிர்பாராத விதமாக தமிழரசுக்கட்சியின் மூவர்ண நிறங்களாலான அந்த மாலையை வெளியே எடுத்து டட்லி சேனநாயக்கா அவர்களின் கழுத்தில் போட்டுவிட்டு அவள் வேகமாகமேடையை விட்டு இறங்கினாள். பிரதமரின் முகமும் யூ. என். பி. வேட்பாளரின் முகமும் அந்த நேரம் மிகவும் பரிதாபமாகக்கறுத்துச் சுருங்கி அவமானத்தால் அவதிப்பட்ட காட்சியை மக்கள் கண்டார்கள்;

பட்டிருப்புத் தொகுதியில் பைந்தமிழர் இனத்துக்காக உழைக்கும் தமிழரசுக் கட்சிக்குத்தான் எப்போதும் இடம்—வேறு யாருக்கும் அங்கே இடமில்லை என்பதை இச்சம்பவம் தெளிவாக நிரூபித்துக் காட்டிவிட்டது.

## அப்பலோ—13

சந்திரனுக்கு அனுப்பப்பட்ட அப்பலோ—13 விண்வெளிக் கப்பலுக்கு நேர்ந்த கதிகேட்டு உலகம் முழுவதும் திடுக்கிட்டு இருக்கிறது. தாய்க் கலத்தில் ஏற்பட்ட கோளாறினால் மின்சக்தியும் பிராணவாயும் தடைப்பட்டதைத் தொடர்ந்து அப்பலோ-13 விண்வெளிக் கப்பலை பூமியை நோக்கி மீண்டும் இறக்குவதில் விண்வெளி கட்டுப்பாட்டதிகாரிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் ஈடுபட்டிருக்கின்றன.

இக்கப்பலில் துணிகரமாக பயணம் மேற்கொண்டு ஆபத்தில்இன்று சிக்கியுள்ள விண்வெளி வீரர்களான ஜிம்லோவலும், பிரெய்ட்ஹெய்சும், ஜாக் ஸ்விக்கேர்ட்டும் பத்திரமாக உயிருடன் பூமிக்கு திரும்ப வேண்டி உலகம் முழுவதும் ஆண்டவனை மண்டியிட்டு பிரார்த்திக்கிறது.

# தமிழ் காங்கிரஸ் தலைமையும்!! தமிழரசுக் கட்சியின் தலைமையும்!!

1947ம் ஆண்டுக்கும் 1956ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்—தமிழ் மக்களுக்கு தமிழ் காங்கிரஸ் தலைமை தாங்கிய நேரத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக எவ்வித பாரபட்சமும் அநீதியும் நிகழவில்லையென்றும் சிங்கள மக்கள் தமிழ் மக்களை மதிப்புடனும் மரியாதையுடனும் சமத்துவமாக நடத்தினார்கள் என்றும், தமிழரசுக் கட்சி தமிழினத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னர் தான் தமிழ் மக்களுக்கு இன்னல்களும் தொல்லைகளும் ஏற்பட்டனவென்றும் ஒரு புதுவகையான பிரசாரத்தை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் நடத்திவருகிறார்.



உங்கள் வீட்டில் திருடுவதற்கு இரவில் திருடர் கூட்டம் ஒன்று நுழைந்து விட்டதென்று வைத்துக்கொள்ளுங்கள்! அப்பொழுது நீங்கள் திருடர்களிடம் உடனடியாக சரணாகதியடைந்து பெட்டிச் சாவிகளையும் ஒப்படைத்து விட்டால் அவர்கள் உங்களைத் தொல்லைப் படுத்தமாட்டார்கள். உங்களை கொடுமைப்படுத்தாது உங்களது சொத்துக்களையும் அபகரித்துக் கொண்டு ஓடிவிடுவார்கள். ஆனால் நீங்கள் அவர்களை எதிர்த்துப் போராடினால் தாக்குதலுக்குள்ளாக வேண்டியே நேரிடும்! சொத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால் கஷ்டப்பட்டே தீர வேண்டும்!

இதேபோல தமிழ் மக்களின் தலைமை தமிழ் காங்கிரஸ் வசமிருந்தபோது, தமிழ்மக்களின் பாரம்பரிய உரிமைகளும் சலுகைகளும் பறிபோவதை எதுவித எதிர்ப்புமின்றி அமைதியாக கைகட்டியபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதனால் எவ்வித கொடுமைகளுக்கும் அவர்கள் ஆளாகாமல் தப்பியும் பிழைத்தார்கள்.

ஆனால் உண்மை நிலையை உணர்ந்து விழித்தெழுந்த தமிழினம், தமிழ் காங்கிரஸ் தலைமையை உதறித் தள்ளிவிட்டு தமிழரசுக் கட்சியின் பாதுகாப்பில் தன்னை ஒப்படைத்த பின், சிங்கள ஆட்சிபீடம் தமிழினத்தின் உரிமைகளையும் பறிக்க எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் நாம் வலிவுடன் எதிர்த்துப் போராடி வந்திருக்கிறோம்: ஆனகாரணத்தினால்தான் சிங்கள அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கும் அவமதிப்புக்கும் நாம் ஆளாக நேரிடுகிறது.

இதுதான் தமிழரசுக் கட்சியின் தலைமைக்கும் தமிழ் காங்கிரஸ் தலைமைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு ஆகும்.

—அ. அமிர்தலிங்கம்,
(கோண்டாவில் கூட்டத்தில்)

சாவகச்சேரியில் 19-ம், 20-ம் நாட்களில்

# வரலாறு காணாத பெருவிழா

## வைரத் தோள் வாலிபரின் எழுச்சிவிழா

சாவகச்சேரி, ஏப். 18.

ஈழத்தமிழினத்தின் எழுச்சி அணியாம் தமிழரசுக் கட்சியின் உணர்ச்சி வரலாற்றில் இன்னுமொரு எழுச்சிப்பொன்னேடு சாவகச்சேரி தமிழரசு கட்சி வாலிப முன்னணி மாநாடு! இத்திங்கள் பத்தொன்பதாம் இருபதாம் நாட்களில் சாவகச்சேரிச் சந்தை மைதானத்தின் கொடிகாமம் ஐயா அரங்கிலே நடக்கவிருக்கும் எழுச்சி விழாவுக்காக வடபகுதி விழாக்கோலம் பூணத் தொடங்கி விட்டது. எங்கும் தமிழரிடை இதுவே பேச்சு-இதைக் கேட்டு விழுந்தது எதிரிகளின் மூச்சு!

சாவகச்சேரித் தொகுதி பூண்ட எழுச்சிக் கோலத்தின் முதற்படிகளாக இத்திங்கள் பத்தொன்பதாம் நாள் அதிகாலை நாவற்குழியிலிருந்தும் கொடிகாமத்திலிருந்தும் புறப்பட்டு இலங்கை தமிழரசுக் கட்சிச் செயலகத்தை அதிகாலை ஆறு மணியளவில் வந்தடையவிருக்கும் மாபெரும் மரதன் அணியும்-திரு. துரைச்சாமி அவர்களின் தலைமையில் நுணாவில் சந்தி-கனகன் புளியடிச் சந்தி புத்தூர்ச் சந்தி-கண்டி வீதி வழியாக காலை எட்டேகால் மணியளவில் விழா அரங்கை வந்தடைய இருக்கும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தமிழரசுக்காளைகளின் துவிச்சக்கர வண்டி அணியும் விழா நிகழ்ச்சிகளுக்கு விறுவிறுப்பூட்டப் போகின்றன.

காலை எட்டு மணியளவில் தமிழுக்காய் உணர்வு தந்து தமிழரசுக் கட்சிச்சாய் உயிர்தரவும் தயாராக அணி திரட்டி ஆற்றல் குவிக்கின்ற சாவகச்சேரித் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணித் தலைவர் வழக்கறிஞர். திரு. நா. அருணாசலம் கட்சிச் செயலகத்தின் முன்னர் கொடியேற்றி விழா நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைப்பார்.

காலை பதினொரு மணியளவில் ஈழத்துப் பட்டேல் இரும்பு மனிதன் எம் தமிழர் இதய வேந்தன் டாக்டர் நாகநாதன் அவர்கள் மூவர்ணக் கொடியை ஏற்றிக் கோலாகலமாக மாநாட்டைத் திறந்துவைப்பார்.

வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம் அன்னார் உள்ளத்தால் ஒருவரே மற்றும் உடலினால் பலராய்க் காண்பார் கள்ளத்தால் நெருங்கொணாதே என வையம் கலங்கக்கண்டு துள்ளுநாள் எந்நாள்? இன்பக் கேணியில் திளைக்குநாள் எந்தநாளோ? என்ற தமிழேறு பாரதிதாசனின் கனவு நனவாகும் காட்சி காண ஈழத்தமிழினம் திரளப்போகிறது தியாகி கொடிகாமம் ஐயா அரங்கிலே!

அன்றுமாலை நான்கு மணியளவில் மாதர் முன்னணியின் மாநாடு. மார்பில் வடு வாங்கி மாள்வதுவே அல்லாமல் போர்முகத்தில் என்றென்றும் புறங்காட்டாத மான மறவரை ஈன்றெடுத்த பண்புத் தமிழ் மகளிர் குலமகள் திருமதி இலட்சுமி சுப்பிரமணியத்தின் தலைமையிலே கோலாகலமாக ஆரம்பமாகும் இம்மாநாட்டில் ''நாய்என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவியில் தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்த'' அன்னையரும், ''சாதி என்றுபோராடும் தக்கைகளின் நெஞ்சில் கனலேற்ற'' வந்த கன்னியரும், உரை ஆற்றிடுவர் - உரிமைப் போருக்கு அணி சேர்த்திடுவர் - உதிரத்தில் கலந்து விட்ட தமிழ்மான உணர்வின் உந்துதலால் ஓராயிரம் ஆணை எடுத்திடுவர் உல காண்ட தமிழ்காக்க!

'அன்னையர் கூட்டம்
ஆர்ப்பரித்தெழட்டும்!
ஐந்துவயதுப் பிள்ளையும்
வரட்டும்!
பொன்னிகர் மாதர்
போர்க்குணம்
கொளட்டும்!'

என்றகண்ணதாசன் பாடலின் காட்சியினைக் கண்ணாரக் கண்டுகளிக்கப் போகிறது சாவகச்சேரி.

மாதர் முன்னணி மாநாட்டை அடுத்து வளர்பிறையாய், வற்றாத தமிழுணர்வும் பொய்கையாய் வளர்ந்து வரும் இளங்களிறுபன்னிரண்டாண்டே நிறைந்த செல்வன் து. இரவிகாந்தன் தலைமையில் எழுபது வயதுப் பொன்னருக்கே கேள்விக்கணை தொடுக்கும் ஆறு வயது மாறன், கடமை வீரர் நவரத்தினத்தின் உரிமைச் செல்வன் எட்டுவயதுப் பாப்பா, உட்பட வருங்காலத் தலைமுறைகள் இக்காலத் தலைமுறைகளுக்கு உணர்வூட்டி அறிவூட்டும் காட்சியினை எமக்களிக்கும் இளந்தமிழர் அணி மாநாடு!

இளந்தலைமுறையின் இனமுழக்கம் ஓய்ந்த பின்னர் இனிய தமிழ்த்தேனூறுமெல்லிசையாய் தென்றலிலே தவழ்ந்துவரும் தமிழினிமை சாற்றிவரும் - சஞ்சலங்களை ஒட்டிவரும்!

மெல்லிசையை அடுத்து தமிழ்த்துரோகிகளுக்கு ஆலால விஷம் அழகுத் தமிழ்ப் பேச்சில் சுந்தரம்-அடலேறு ஆலாலசுந்தரத்தின் உணர்ச்சி கொப்பளிக்கும் எழுச்சி நாடகமான ''தமிழன் கதை'' இடம் பெறும்.

இரண்டாவதுநாள் நிகழ்ச்சிகள். ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'' என்ற பழுதில் வள்ளுவன் பைந்தமிழ் வணங்கி உழவு இயந்திர அணியின் புறப்பாட்டுடன் ஆரம்பமாகும்: இவ்வணி மாலை இரண்டு மணியளவில் நாவற்குழிச் சந்தியிலிருந்து புறப்பட்டு நுணாவில் சந்தி, கனகன் புளியடிச்சந்தி, மத்துவில் சந்தி, வரணி மகாவித்தியாலயம் சந்தி, பருத்தித்துறை வீதி ஆகிய தமிழரசுக்கோட்டைகள் வழியாக கொடிகாமம் வந்து அங்கிருந்து புறப்படும் மாபெரும் ஊர்வலத்தோடு இணையும். ஊர்வலம் கண்டி வீதி வழியாக சாவகச்சேரி கொடிகாமம் ஐயா அரங்கை வந்தடையும்

மாலை ஏழு மணியளவில் ஐயா அரங்கில் கடமைவீரர் நவரத்தினத்தின் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் ஆரம்பமாகும். தமிழரசுத் தலைவர்களும் தமிழரசுத் தியாகிகளும், தமிழரசுத் தொண்டர்களும் இலக்கியத்தேன் பொழிவர்—சமூக சீர்திருத்த மருந்துகள் வழங்குவர் — கொள்கை விளக்கம் கொடுப்பர் — விடுதலைப் போர்த்திட்டங்களை விளக்குவர்— இனமுழக்கம் ஒலிப்பர்-எதிர்வாதம் செய்வோருக்குக் கேள்விக்கணைகள் தொடுப்பர் வீரத் தமிழருக்கு விடுதலை வெறி கொடுப்பர்.

எழுகதமிழரேஎழுகவருக! தமிழரே வருக! புத்துணர்வு பெறுக! அடிமைத்தளை அகற்றுக! அன்னைத் தமிழை அரியணை ஏற்றுக! இனிவரும் தலைமுறையெல்லாம் மானத்துடன் உரிமையுடன் வாழ இன்றே சுதந்திரம் பெற்றுத்தருக! வருக—வாழ்க!

# திட்டித் தீர்த்தார் சிவசிதம்பரம்! அத்துடன் தட்டிக் கழித்தார் கேள்விகளை!

## தமிழ் காங்கிரசை வேரோடு சாய்க்க நெடுங்கேணி மக்கள் உறுதி!

சட்டமேதை பொன்னம்பலத்தின் வட்டமேசை அங்கத்தவர்களில் ஒருவரும் —வவுனியாத் தொகுதியின் முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினருமான திருவாளர் தா. சிவசிதம்பரம் சமீபத்தில் நெடுங்கேணியில் ஓர் காங்கிரஸ் அலுவலகத்தைத் திறந்து வைத்தார். அங்கு வந்த ஜனக்கூட்டத்தைச் சமாளிப்பதே பெரும்பாடாகப் போய்விட்டது. எண்ணில் அடங்காத ஜனக்கூட்டத்தை எண்ணிப்பார்தத போது முப்பத்தைந்து என்னும் விடையே கிடைத்தது. அப்படியாயின் ஜனக்கூட்டத்தைக் கற்பனையில் கண்டு பாருங்கள்.

கூட்டத்தில் சிவசிதம்பரம் பேசும்போது, நெடுங்கேணி தமிழரசு வாலிபன் பொன்கலன்ட் (கிருபை)என்பவரையும் சுதந்திரனையும் திட்டித் திட்டிப் பேசினாரே தவிரத் தங்கள் கொள்கைகளையாவது தாங்கள் இதுவரை சாதித்தது என்னவென்பதை யாவது கூறவில்லை.

ஒவ்வொரு கூட்டங்களிலும் தமிழரசுக்கட்சியாளரைத் திட்டித்தீர்ப்பதுதான் இவரது வேலை! கற்சிலை மடுவில் மடிந்த மன்னனுக்குச் சிலை நிறுவத் தான் தடையாக இருக்கவில்லை என்றும் சுதந்திரன் செய்தி பிழையானது என்றும் சிவசிதம்பரம் கூறினார். இதை யார் தான் நம்புவார்?

இதன்பின் நெடுங்கேணி வளர்மதி ஸ்ரோர்ஸ் அதிபர் பேரம்பலம், நெடுங்கேணி அரசினர் வைத்தியசாலைக்கு நோயாளர் தங்கும் விடுதிக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை முல்லைத்தீவுக்கு ஏன் மாற்றினீர்கள்? என்ற கேள்வியைக் கேட்டார்.

வவுனியாத் தொகுதியில் எக்ஸ்ரே பிடிக்கும் இடம் இல்லாத காரணத்தால் முல்லைத்தீவிலே எக்ஸ்ரே பிடிக்கக்கூடிய வசதி செய்வதற்காகவே மாற்றினேன். நெடுங்கேணி அரசினர் வைத்தியசாலைக்கு எழுபதாம் ஆண்டு முடிவதற்குள் நோயாளர் தங்குவதற்கு கட்டடம் கட்டப் பணம் ஒதுக்குவிப்பேன் என்றும் தட்டிக்கழித்துப் பதில் சொன்னார்.

முல்லைத்தீவுக்குப் பணத்தை மாற்றி அங்கே எக்ஸ்ரே பிடிக்கக்கூடிய வசதி செய்துள்ளாரா? இதுவரை அப்படி வசதி செய்யப்படவில்லையே; அப்படியானால் இத்தேர்தலில் செல்லத்தம்பு வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது. செல்லத்தம்பு பா. உ. வாக வந்துஎக்ஸ்ரேபிடிக்கக்கூடிய வசதி செய்தால், அதைத் தான் தான் செய்தேன் என்று பிரசாரம் செய்வதற்காகவே இப்படிக் கூறினார் என்று சந்தேகிக்கவேண்டியிருக்கின்றது.

அடுத்து 70ம் ஆண்டு முடிவிற்குள் நோயாளர் தங்கும் விடுதி கட்டித்தருவதாகக் கூறினாரே; இப்படி இவர் அளித்த வாக்குறுதிதான் எத்தனை, அதில் எத்தனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. நெடுங்கேணிப் பகுதி மக்கள் முன்னிலையில் ''நான் மண்வெட்ட எனது மனைவி மண் சுமந்தாவது உங்கள் வீதியைத் திருத்துவேன்'' என்று அன்றொரு நாளிலே அளித்தாரே வாக்குறுதி அதை நிறைவேற்றினாரா? இன்று அவ்வீதியால் செல்வோர் எல்லாம் திட்டித்திட்டிச் செல்லவில்லையா? இது சிவசிதம்பரத்தின்காதுகளில் கேட்கவில்லையா?

நெடுங்கேணிப் பகுதியிலே தனிப்பட்ட முறையிலே இயங்கி வரும் பாடசாலைகள் நான்கை அரசினர் பாடசாலையாக்குகின்றேன் என்று அளித்தாரே வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதா? வருடங்கள் எத்தனை ஓடி மறைந்துவிட்டன. இன்று ஒன்று மூடப்பட்டு மற்றைய மூன்று பாடசாலைகளும் குற்றுயிருடன் இருக்கின்றனவே இவற்றின் கதி என்ன?

வட்டுகாகல்லில் செந்தமிழ் சைவமக்கள் போற்றும் தெய்வம் கொலுவிருக்கும் தெய்வ சந்நிதானத்தை மடிந்த மாமன்னன் பண்டார வன்னியனின் மனைவி குடிகொண்டிருக்கும் கோபுரம் என்று பண்டார வன்னியனுக்கும் கோவிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்துக்கும் அழியாத வசையைத் தேடிக்கொடுத்தாரே இதுவா இவரது சாதனை? இதுவா இவரது தொண்டு?

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக்கு பிரசாரம் செய்ய

## மலையகத்திலிருந்து இளைஞர் படை!

அட்டன்' ஏப்: 15

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குஆதரவுப் பிரசாரம் செய்ய மலையகத்திலிருந்து வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு செல்லும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வாலிப முன்னணி மே மாதம் முழுவதும் இப்பணியில் ஈடுபடவிருக்கிறது.

மலையக மக்களுக்கு தமிழரசுக்கட்சி செய்துள்ள நன்மைகள் பற்றி விளக்கிக் கூறவிருக்கும் இப்பிரசாரக் குழு குறிப்பாக ஊர்காவற்றுறை தொகுதியில் ஸ்ரீமா-சாத்திரி ஒப்பந்த அமுல் சட்டத்தின் மூலம் ஏற்பட்டிருக்கும் நன்மையை விளக்கிக் கூறவிருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதோடு வட்டுக்கோட்டை, சாவகச்சேரி ஆகிய தொகுதிகளிலும் தீவிர பிரச்சாரத்திலீடுபடும்.

சுதந்திரன் 18—4—70 தொலைபேசி 23411

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

## நடுத்தெருவில் நடுநிசியில் ஆலாலசுந்தரத்துக்கு மிரட்டல்!

# காங்கிரஸ் காலிகள் காடைத்தனம்! கிளிநொச்சியிலும் பயங்கரமா?

கிளிநொச்சி, ஏப். 16

தமிழ் காங்கிரஸ் கூலிப்படையினரின் காடைத்தனம் கிளிநொச்சித் தொகுதி யெங்கும் வேகமாகப் பரவிவருகிறது. தாங்கள் பொதுத் தேர்தலில் தோற்பது நிச்சயம்என்பதை உணர்ந்து விட்ட தமிழ் காங்கிரஸ் கட்சியினர் இப்போது வன் முறையிலீடுபடத் தொடங்கியுள்ளனர். கிளிநொச்சி தமிழரசு வேட்பாளர் திரு. மு. ஆலாலசுந்தரத்திடம் தங்கள் கைவரிசையைக் காட்டுமளவுக்கு காங்கிரஸ் காடையர்களின் வெறித்தனம் முற்றியுள்ளது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:—

11-4-70 ல் ஜெயற்தி நகரில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பி வீட்டுக்கு வந்து கொண்டிருந்த ஆலாலசுந்தரம் வழி மறிக்கப்பட்டார். எதிராக வந்த சி. என். 5157 ம் இலக்கக் காரில்வந்த கிளிநொச்சிக் காங்கிரஸ் கட்சியினர்களான, சின்னராசா, நாகராசா, வல்லிபுரம் இன்னும் பலர் காரிலிருந்து இறங்கி ஆலாலசுந்தரத்தின் காரை நோக்கி வந்தனர்.

கிளிநொச்சியில் பேசுவதும் நடப்பதும் கவனமாகஇருக்க வேண்டும்—நாங்கள் நினைத்தால் நீர் ஆளே இல்லாமல் போய் விடுவீர் என எச்சரித்தனர். அப்போது நேரம் நடு இரவு 12 மணி இருக்கும்.

சண்டியர்களைச் சமாளித்து அவர்களைத் திருப்பி அனுப்பிய ஆலாலசுந்தரம் தற்பாதுகாப்பின் பேரில் பொலிஸ் நிலையத்துக்குச் செல்ல எண்ணிய போதும் அவர்களின் சி. என். 5157 ம் இலக்கக் கார் பின் தொடர்ந்து வந்தது. வீதி வழியேவந்த 'பொலிஸ் ஜீப்' காரையும்— நண்பர்களையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றது.

சண்டித்தனத்தால்— பயமுறுத்தலால் — தேர்தல் வெல்ல முடியாது என்பதை கிளிநொச்சித் தொகுதி மக்கள் என்றோ அறிந்தவர்கள்! அவர்களின் நிலையை என்றோ பொதுமக்கள் புரிந்து கொண்டார்கள். சண்டித்தனத்தால் இதுவரை கிளிநொச்சித் தேர்தல் நடைபெறவில்லை என்பதைப் பொதுத் தேர்தல் முடிவுகள் தெரிவித்து விடும் என்று பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

---

### மார்ட்டினுக்கு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வாக்கு என்று முடிவு செய்து விட்டார்கள்.

யாழ்ப்பாணத் தொகுதியிலுள்ள சிறுபான்மைத் தமிழர்களும் திரு. மார்ட்டினையே இம்முறை நூறு வீதம் ஆதரிக்கிறார்கள்.

மாநகர சபையின் புதிய வட்டாரப் பிரிவினையின்படி சிறுபான்மைத் தமிழர்கள் மாநகரசபைக்கு ஐந்து உறுப்பினர்களை தெரிவு செய்யக் கூடியதாக அறிக்கை தயாரித்தவர் திரு. மார்ட்டின் அவர்களே. இந்த அறிக்கையை அமுல் நடத்த விடாது கல்லுக்குத்த முன் நின்றவர் திரு. பொன்னம்பலம். ஆகவே பொதுத் தேர்தலில் திரு. பொன்னம்பலத்தை ஒரு கை பார்ப்போம் என்று அவர்கள் முன் நிற்கிறார்கள்.

கத்தோலிக்க மக்கள் மத்தியிலும் திரு. பொன்னம்பலத்துக்கு கடும் எதிர்ப்பு தோன்றியுள்ளதாம். இந்துக்களுக்காக இந்துப் பல்கலைக்கழகம் கோரும் நீங்கள் கத்தோலிக்க பல்கலைக் கழகம் ஒன்றும் பெற்றுத்தருவீர்களா என்று திரு. பொன்னம்பலத்தை நோக்கி அவர்கள் கேள்விக்கணை எழுப்ப விருக்கிறார்கள்.

அண்மையில் குருநகரில் வாக்கு வேட்டையாடச் சென்ற திரு. பொன்னம்பலத்துக்கு சுடச் சுடப் பதிலடி கொடுத்து அங்குள்ள இளைஞர்கள் விரட்டியடித்ததாகவும் தெரிகிறது.

முஸ்லிம் மையவாடிப் பிரச்சினையில், முஸ்லிம்களின் விருப்பத்துக்கு மாறாக திரு. பொன்னம்பலம் நின்றார் என்ற காரணத்தால் அவரை தோற்கடித்தே தீருவது என்று யாழ் முஸ்லிம்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் மே 27ம் நாள் திரு. பொன்னம்பலம் திரு. மார்ட்டின் அவர்களால் தோற்கடிக்கப்படுவது உறுதியென மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

---

### திட்டித் தீர்த்தா......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்சிலைமடு! இதுதான் மன்னன் பண்டார வன்னியன் மடிந்த இடம். மடிந்த மண்ணும் கற்சிலை மடுவிலே மன்னனுக்குச் சிலை நிறுத்தாது நாற்சந்தியிலே சிலை நிறுத்த எண்ணினாரே சிவசிதம்பரம் இதுவா அவரது பொதுநல சேவை?

இவர் நாற்சந்தியிலே சிலை நிறுவித் தனது புகழைப் பெருக்க எண்ணினாரா? மன்னன் புகழைப் பெருக்க எண்ணினாரா? மன்னன் புகழ் எங்கிருந்தாலும் பரவும் தானே! என்றெல்லாம் மக்கள் பேசிக்கொண்டனர். செல்லத்தம்புவின் செல்வாக்கை கண்ட சிவசிதம்பரத்துக்கு வாயிறுகலக்குகிறது அதனால் வாயில் இருந்து ஏதேதோ புலம்பல் எல்லாம் வெளிவருகின்றது என்று மக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

(நெடுங்கேணி நிருபர்)

---

### தமிழ்ப் பெயர்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மொழி சிவப்பு வர்ணத்தினால் அளிக்கப்பட்டுள்ளது.

இச்செயல் மலையக மக்கள் மனதில் பெரும் பீதியையும் பதட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனைப் பொலீசார் கண்காணித்து தார்ப் பூச்சுக்களை அழித்து மீண்டும் தமிழ் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள்.

---

### மாபெரும் ஊர்...

(1ம் பக்க தொடர்ச்சி).

டையும். இன்றைய கூட்டம் மிகப் பெரிய அளவில் நடைபெற இருக்கின்றது. கட்சி அபேட்சகர்களை வரும் கலந்துகொள்ள இருக்கின்றனர். அத்துடன் தமிழன் கதை நாடகம் கூட்ட இறுதியில் இடம் பெறுகிறது.

---

### உதுமான் லெப்பை கல்முனைத் தமிழரசு வேட்பாளர்!

பாண்டிருப்பு, ஏப். 16

கல்முனைத் தொகுதி தமிழரசு வேட்பாளராக ஜனாப் ஏ. உதுமான்லெப்பை அவர்கள் கட்சித் தேர்தல் அங்கத்தவர் நியமனக் குழுவினால் 9-4-70ல் கல்முனைத் தொகுதியில் நடாத்திய கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, பெரிய நீலாவணை ஆகிய கிராமங்களிலிருந்து கட்சிக் கிளைகளின் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் தேர்தல் நியமனக் குழுவின் சார்பில், பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், பொ. வி. கந்தையா நொத்தாரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### கார்ட்டூன் விளக்கம்!

யூ. என். பி. தான் தமிழ் மக்களுக்கு விமோசனம் தரும்; டட்லி சேனநாயகாதான் தமிழினத்தை இரட்சிக்கக் கூடியவர் என்றெல்லாம் தமிழ்காங்கிரஸ்—யூ. என். பி. யாளரான திரு. வி. குமாரசாமி இன்று புலம்பிவருகிறாரல்லவா? ஆனால் 1952ம் ஆண்டு மார்ச் மூன்றும் திகதி 'ஒப்சேவர்' ஏட்டில் வெளிவந்த இக் கார்ட்டூன் மூலம் யூ. என். பியால் உண்மையில் பயன் பெறுபவர் யார் என்பதை தத்ரூபமாக காட்டியிருக்கிறார் பிரபல கார்ட்டூனிஸ்ட்டான 'கொலட்'

படத்தைப் பாருங்கள்! யூ. என். பி. பசும் புல்லில் அரசாங்க நிழலில் நிம்மதியாக சொகுசாக காலுக்கு மேலே கால் போட்டபடி படுத்திருக்கிறார் திரு. குமாரசாமி. எதிரே பாலைவனமாக யாழ்ப்பாணம் காட்சி தருகிறது. முன்னால் பரிதாபத் தோற்றத்துடன் கந்தலுடையில் தோன்றும் ஒரு விவசாயி.

செய்தியென்ன தெரியுமா? "இலங்கைதான் உலகின் ஒரே ஒரு பூலோக சொர்க்கம். வடக்கிலே அரசாங்கம் செய்துள்ள மாபெரும் வேலைகளைப் பாருங்கள்..."-வி. குமாரசாமி.

திரு. குமாரசாமியின் சுயநல நோக்கம் என்னவென்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா? யூ. என். பி. ஆட்சியால் தமிழ்மக்களுக்கோ தமிழ் பிரதேசத்துக்கோ நன்மையில்லை; தனியொருவருக்கே சொர்க்கம் என்பது புரிகிறதல்லவா?

---

### இ. தொ. கழகம் நடவடிக்கை!

அட்டன், ஏப். 15

மலைநாட்டில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் கிளை அலுவலகங்கள் இயங்கி வரும் அட்டன், தலவாக்கொல்லை, இராகலை, பன்விலை ஆகிய மாவட்டங்களில் வாக்களிக்க உரிமையுள்ள கழக உறுப்பினர்கள் இப்பகுதிகளில் எந்தெந்த அபேட்சர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை முடிவு செய்வதற்காக மேற்படி மாவட்டங்கள் தோறும் தோட்டக் குழு, வாலிப முன்னணி முக்கியஸ்தர்களின் கூட்டங்களை நடத்தி ஆராய கழகமேலிடம் நடவடிக்கைஎடுத்துவருகின்றது.

---

### கருப்ப நீர்...


(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று உடுப்பிட்டித் தமிழரசுக்கட்சி வேட்பாளர் தியவில் மக்களால் தமக்களிக்கப்பட்ட வரவேற்பின்போது கூறினார்.

திரு. ஜெயக்கொடி மேலும் பேசும்போது, தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருக்கும்போதே இச் சட்டம் உண்டாக்கப்பட்டது. அச்சட்டத்தைக் கொண்டு வர வேண்டாமென்றோ அல்லது கொண்டு வந்தபின் நீக்கும்படியோ கேட்டார்களில்லை. தமிழ் காங்கிரசார் சிறுபான்மைத் தமிழர்களின் துயர் துடைக்க ஒருபோதும் முன் வந்தார்களில்லை. சிறுபான்மைத் தமிழர்களை எதிர் நோக்கியிருந்த பல பிரச்சினைகளிலும் தலையிடாது கண்மூடி மௌனியாக இருந்தவர்கள் காங்கிரசார்களே தவிர தமிழரசாரில்லை.

கடந்த காலத்தில் தலைவிரித்தாடிய சாதி வெறியின் போது தமிழரசார் ஆற்றிய சேவை நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். சிறுபான்மைத் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்ட ஒரு கட்சி ஈழவள நாட்டில் இருக்குமாக இருந்தால் அது தமிழரசுக் கட்சியாக மட்டுமே இருக்க முடியும் என்றும் கூறினார்.

---



## அத்தானின் மண்டபம்

'அத்தான்.........'

'கண்ணே.........'

'தந்தை செல்வாவுக்கும் பொன்னம்பலத்துக்கும் உள்ள வித்தியாசத்தை சுருக்கமாகச் சொல்வீர்களா?'

'ஓ... சொல்கிறேனே...'

'சொல்லுங்கள் அத்தான்!'

'கேள் கண்ணே... யாருக்கோ எதையோ பேசுவதற்காக ஐ. நா. சபைக்கு ஒரு தடவை பொன்னம்பலம் போனார். அவர் போய் வந்த உடனே அவரைப் பாராட்டி அவர் கழுத்தில் அவருடையவால்கள் ஒரு தங்க மாலை போட்டார்கள்.'

'ஆமாம் நினைவில் இருக்கிறது அத்தான்.'

'கண்ணே... இன்னும் கேள்... உனக்குத் தெரியுமா? தந்தை செல்வா ஒரு முறை தமிழினத்தின் நல்வாழ்வுக்காக மட்டக்களப்பில் சிங்கள சிறீ எழுத்தை அழித்தார். அவரைப் பொலீசார் கைது செய்து சிறைச்சாலையில் அடைத்தார்கள்?'

'ஆமாம் அத்தான்... தந்தை செல்வா சிறை சென்ற அந்த நிகழ்ச்சியும் இன்னும் என் நினைவில் பசுமையாகவே இருக்கிறது!'

'கண்ணே... வித்தியாசம் இப்போதுதெரிகிறதா...? தன்னுடைய சொந்தப் பெருமைக்காக ஐ. நா. சபைக்குப் போய் வந்து மாலை வாங்கினார் பொன்னம்பலம்— தமிழினத்துக்காக சிறைக்குப் போய் துன்பம்தாங்கினார் தந்தை செல்வா.'

'அழகாகச் சொன்னீர்கள் அத்தான்... பொன்னர் தன்னலத்துக்காகப் பெற்றுக்கொண்டது பொன்மாலை! செல்வா தமிழினத்துக்காகப் பெற்றுக்கொண்டது சிறைச்சாலை!'

---

### சயிக்கிள் ஊர்வலம்

புத்தாண்டு தினத்தன்று நல்லூர் சந்தை மைதானத்தில் நடந்த கேள்வி-பதில் கூட்டத்திற்கு கந்தர் மடத்தில் இருந்து டாக்டர் நாகநாதன் தலைமையில் பிரமாண்டமான ஓர் ஊர்வலம் புறப்பட்டுச் சென்றது. இந்த ஊர்வலத்துடன் சேர்ந்து கலந்துகொள்வதற்காக இ. த. அ. கட்சியின் கோண்டாவில் கிளைச் சார்பில் சுமார் 150 தொண்டர்கள் மூவர்ணக் கொடிகளை தாங்கிய வண்ணம் சயிக்கிளில் கோண்டாவில் புகையிரத நிலையத்துக்கருகாமையில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டுச் சென்றனர். அத்துடன் சயிக்கிள்களில் வாலிபப் படை முன் செல்ல அதன் பின்னால் உழவுயந்திரமொன்றில் இன்னும் சில வாலிபர்கள் சுமார் மூன்று யார் நீள, அகலம் கொண்ட பெரிய மூவர்ணக் கொடியொன்றை தாங்கிய வண்ணம் ''இரும்பு மனிதன் நாகநாதன் வாழ்க'' எங்கள் நாதன் நாகநாதன்'' என கோஷித்த வண்ணம் சென்றனர்.

---

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ இல்லத்தில் 1970-ம் வருடம் ஏப்பிரல் மாதம் 18-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்